# இரண்டு பாணிகள் 16

ஈழத்தின் கிழக்குப் பகுதியிலே உள்ள தமிழர் வாழ்கின்ற பாரம்பரியப் பிரதேசமான மட்டக்களப்புப் பகுதியிலே இரண்டு பாணிகளில் (மோடிகளில்) அமைந்த கூத்துக்கள் இன்றும் பயில் நிலையிலுள்ளன.

இவ்வகையில் இங்குள்ள கூத்துக்கள் வடமோடி, தென்மோடி என்று அழைக்கப்படுகின்றன. கதைக்கரு ஆடப்படும் முறை, பாடப்படும் முறை, ஒப்பனை, உடை அமைப்பு என்பனவற்றில் இரண்டு பாணிகளுக்கும் இடையே வேறுபாடுகள் உண்டு.

இரண்டுமே கதை கூறும் பாணியில் அமைந்த விவரண அரங்காகும். ஆடலும் பாடலுமே இவற்றின் பிரதான ஊடகங்கள். மக்களுக்குத் தெரிந்த கதைகளே இதில் நிகழ்த்தப்பட்டன. இதனால் நாடகத்தின் பாத்திர வார்ப்பு, புது வியாக்கியானம் என்பன இடம் பெறாது போயிற்று.

வடமோடி நாடகமானது, தென்மோடி நாடகத்திற்குப் பின்னர் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்ததும் இங்குள்ள முன்னைய நாடக வடிவங்களுடன் தென்மோடியின் சில அம்சங்களையும் பெற்று வளர்ந்ததுமான ஒரு நாடக வடிவமாகும்.

இக்கூத்திற்குத் தமிழ் நாட்டுத் தெருக்கூத்து கர்நாடக யக்ஷகானம் மலையாளக் கதகளி என்பனவற்றிற்குமிடையே சில ஒற்றுமைகள் உண்டென்பர் ஆராய்வாளர்கள். இந் நாடகத்தைப் பழக்குபவர் அண்ணாவியார் என அழைக்கப்படுவர்.

இந் நாடகம் கிராமப்புறத்தில் விடிய விடிய ஆடப்படுகின்ற நாடகமாகும். இதன் மேடை அமைப்பு வட்டவடிவமானது. மக்கள் சூழ இருந்து பார்வையிடுவர் இவ் வட்ட மேடையினை மட்டகளப்பில் கூத்துக்களரி என அழைப்பர். சூழ மக்கள் இருந்து பார்வையிட அலங்கரிக்கப்பட்ட இந்த வட்டக்களரியின் நடுவே நின்று அண்ணாவியார், ஏடுபார்ப்பவர் (கொப்பிபார்ப்பர்), தாளக்காரர் இருவர் (சல்லாரி அடிப்பவர்), பிற்பாட்டுக்காரர் இருவராகிய அறுவர் கொண்ட சபையோர் இந்

நாடகத்தை நடத்திச் செல்வர். அண்ணாவியார், மத்தளத்தை இடுப்பிலே கட்டியபடி களரியின் மத்தியில் நின்றபடி வாசிப்பார். இதனை மத்தளம் அடித்தல் என்பர்.

சபையோர் என்றழைக்கப்படும் இந்த அறுவரும் வட்டக்களரியில் நடுவில் நிற்க பார்வையாளரை நோக்கிய படி இந்த அறுவருக்கும் பின்புறம் காட்டியவாறு வட்டக் களரிக்குள் சுற்றி ஆடிப்பாடிக் கூத்தர் கூத்தை நிகழ்த்துவர்.

திறந்த வெளி வட்டக்களரி ஆனமையினால் காட்சிகளின் பின்னணியை விளக்கும் திரைச் சீலைகளோ, மேடைப் பொருட்களோ, மேடையில் இராது. அண்ணாவியார் அல்லது ஏடுபார்ப்போர் பாடல் மூலம் காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் விளக்குவர். ஒருவகையில் இவர்கள் யக்ஷகானத்தின் பாகவதரை ஒத்திருப்பர்.



புதிதாக ஒரு பாத்திரமோ அதனோடு ஏனைய பாத்திரங்களோ மேடையில் தோன்றுமிடத்து திரைச்சீலை பிடிக்கப்பட்டு அதன் பின்னணியிலேயே பாத்திரம் நின்று தன்னைத்-தானே விருத்தம் மூலம் அறிமுகம் செய்து கொள்ளும். அதன் பின்னர் பிடிக்கப்பட்ட திரை எடுக்கப்பட்ட பின்னர் பாத்திரத்தின் குணாம்-சத்திற்கு தக்கதான ஒரு தாளக்கட்டு (ஜதிக்கோவை) இடம் பெறும். அண்ணாவியாரும் சபையோரும் இத்தாளக்கட்டைக் கூற, அதற்குத் தக்கபடி வடமோடிக்குரிய பல ஆட்டக் கோலங்களை (வீசாணம், எட்டு, பொடியடி, ரத்து, நாலடி) ஆடி முடித்த பின் தன்னைப் பற்றியும் தான் வந்த காரணம் பற்றியும் தருவிலே பாடி மேடையைச் சுற்றி ஆட ஆரம்பிக்கும். உப பாத்திரங்களுடன் பாடல் மூலம் தொடர்பு கொள்ளும் .

தொடர்பு கொள்வதற்கும், பாத்திரங்கள் தமக்குள் தாமே சம்பாஷணை புரிவதற்கும் விருத்தம், தரு, அகவல், கந்தர்த்தம் முதலான பாவகைகளும் வசனமும் கையாளப்படுகின்றன.

வடமோடியில் தாளக்கட்டுக்கள் முக்கியமானவை. அரசன், அரசி, இளவரசன், வீரர்கள், குரங்குகள், அஃறிணைப் பொருட்கள், தாழ் நிலைப் பாத்திரங்கள் என்பனவற்றிற்கும் தேரேறுதல், குதிரையிற் செல்லுதல், படையெடுத்தல் என்னும் நிகழ்ச்சிகளுக்கும் வித்தியாசம் வித்தியாசமான தாளக்கட்டுகள் உண்டு.



மத்தளமும், தாளமுமே (சல்லாரி) இந்நாடகத்தில் கையாளப்படும் இசைக்-கருவிகளாகும். (பாத்திரங்கள் முழங்காலில் இருந்து புறங்கால் வரை இரண்டு கால்களிலும் நிறையச் சதங்கைகள் அணிந்து வரும்.) மத்தள ஓசையும், சல்லரி ஓசையும், சதங்கை ஒலியும், உச்சஸ்தாயியில் பாடப்படும் பாடல்களும், கலந்து இரவு முழுதும் அதிரும் ஒலி இக்கூத்திற்கு ஒரு தனிச் சுவை தரும்.

மட்டக்களப்பு மக்கள் மத்தியில் முன்னொரு-போது அவர்கள் ஊனோடும், உதிரத்தோடும் இக் கூத்துக் கலை இணைந்தும், பிணைந்தும் கிடந்தது. எனவேதான் மடடக்களப்பை 'ஊர் ஊராய்க் கூத்தாடும் ஊரம்மா' என வருணித்தனர்.

இக்கூத்து உருவாக்கும் முறை பல படி நிலைகளைக் கொண்டது. சட்டம் கொடுத்தல் என்பது கூத்துக்கான பாத்திரத் தெரிவாகும்.

தினக்கூத்து என்பது தினமும் இரவு வேளைகளில் கூத்தினை சமதள மேடையிற் பழகுவதாகும்.

சதங்கை கட்டுதல் என்பது சதங்கை அணிவித்து ஒரு நாட் பகல் முழுவதும் கூத்தினை ஆடுவதாகும்.

கிழமைக் கூத்தென்பது சதங்கை கட்டி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மகளிர் இக்கூத்தைப் பயில்வதாகும்.

அடுக்குப் பார்த்தல் என்பது வெண்உடுப்பு நிலையில் ஒரு இரவு பூராகவும் ஆடிப்பழகுதல் ஆகும்.

முதலாம் அரங்கேற்றம் என்பது கூத்து ஆடை அணிந்து சதங்கை கட்டி ஒரு விழாவாகப் பழகிய கூத்தை அரங்கேற்றுவதாகும். இங்கே மக்கள் கூத்திற்குப் பரிசுகள் வழங்குவர்.

இரண்டாம் அரங்கேற்றம் எதுவித இடைநிகழ்வுகளும் இன்றி அழகாக இடம் பெறும்.

வீட்டுக்கு வீடு ஆடுதல் என்பது, கூத்து அரங்கேற்றம் முடிவிலே ஒவ்வொரு வீடாக கூத்தின் சில காட்சிகளைச் செய்து காட்டுவதாகும்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் போன்ற ஏனைய தமிழ்ப்-பிரதேசங்களிலும் கூத்துக்களுண்டு. எனினும் ஆட்ட முறைகள், மேடை அமைப்பு

அளிக்கை முறை என்பனவற்றில் பழைய முறைகளைப் பேணும் இடம் மட்டக்களப்பு பிரதேசமே. அதற்கான அரசியல், புவியியல், பொருளாதார காரணங்களுண்டு. இக்கூத்து இங்கு தொழில் முறையாகவோ, தனித்த ஒரு சாதியினராலோ ஆடப்படுவதன்று. அனைத்துச் சாதியினர் மத்தியிலும் இக்கூத்து இருந்துள்ளது. நகரம் சார்ந்த பகுதிகளில் பெரும்பாலும் வடமோடிக் கூத்தும் கிராமம் சார்ந்த பகுதிகளில் பெரும்பாலும் தென் மோடிக் கூத்தும் நடைபெற்றுள்ளன. சில கிராமங்களில் இது ஒரு சமூக விழாவாக அனைத்து மக்களையும் இணைக்கும் கலையாக உள்ளது. இதனாலேயே 1960 களில் இது ஈழத்துத் தமிழர் நாடகமாக முகிழ்க்கும் வாய்ப்பையும் பெற்றது.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| கூத்து | - | ஆடிப்பாடி நடிக்கும் நாட்டுப்புறக் கலை |
| பயில்நிலை | - | கற்றல் |
| அண்ணாவியர் | - | கூத்தாசிரியர் |
| ஒப்பனை | - | நடிகர்கள் முகத்திலும் கைபோன்ற உறுப்புகளிலும் வண்ணக் கலவையால் பூசிக்கொள்ளும் அல்லது அணிகளை அணிந்து கொள்ளும் அலங்காரம். |
| விவரணம் | - | நிகழ்ச்சி, காட்சி முதலியவற்றை உரிய ஒழுங்கில் ஒன்றை அடுத்து ஒன்றாக வெளிப்படுத்துதல். |
| தெருக்கூத்து | - | தெருக்களில் மேடையில்லாமல் கதைகளை இசைப்-பாடல்கள், வசனம் போன்றவற்றுடன் நடித்துக் காட்டும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி. |
| மலையாளக் கதகளி | - | கேரள நாட்டின் நாட்டிய நாடக வகைகளுள் ஒன்று. |
| மத்தளம் | - | மிருதங்கம் போன்ற தோல் வாத்தியம். |
| பாகவதர் | - | தொழில்முறைக் கர்நாடக இசைப்பாடகர். |
| விருத்தம் | - | பா வகைகளுள் ஒன்று |
| பா | - | பாட்டு / செய்யுள் |
| களரி | - | வட்ட வடிவமான மேடை |
| சட்டங் கொடுத்தல் | - | பாத்திரத்தெரிவு |
| அடுக்குப் பார்த்தல் | - | வெண்ணிற ஆடையணிந்து கூத்துப் பயிற்சி பெறல் |
| உச்சஸ்தாயி | - | குரலின் மேல்எல்லை |
| அளிக்கைமுறை | - | வழங்கும்முறை / நிகழ்த்தும்முறை |
| முகிழ்தல் | - | தோன்றுதல் |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கிரகித்தற் பயிற்சி

1. மட்டக்களப்புப் பகுதியில் ஆடப்படும் கூத்துக்களின் இரு பாணிகளையும் எழுதுக.
2. மட்டக்களப்புக் கூத்துக்களிடையே காணப்படும் வேறுபாடுகள் எவை?
3. இப்பாடத்தில் குறிப்பிடப்படும் கூத்து வடிவங்கள் எவை?
4. கூத்தைப் பழக்குபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
5. கூத்து மேடை எவ்வாறு அழைக்கப்படும் ?
6. கூத்து வாத்தியக் கருவிகள் எவை?
7. இலங்கையில் கூத்தாடப்படும் இடங்கள் எவை?
8 கூத்து உருவாக்கத்தின் படிமுறைகள் எவை?
9. உமது பிரதேசத்தில் ஆடப்படும் கூத்துக்கள் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
10. கூத்துக் கலையைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை விளக்குக.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : உமது பிரேதசத்தில் கூத்து முதலிய நாட்டுப்புறக் கலைகளை நிகழ்த்தக் கூடிய கலைஞர்களிடம் கலந்துரையாடி அவைகள் பற்றிய தகவல்களைத் திரட்டுக.

செயற்பாடு 2 : குழுவாகச் செயற்பட்டு திரட்டிய விடயங்களைத் தொகுத்தெழுதி வகுப்பில் காட்சிப்படுத்துக.

செயற்பாடு 3 : குழுவாகச் செயற்பட்டு உமது பிரதேசத்தில் பாடப்படும் கூத்துப்பாடல்களைப் பாடிப்பழகுக.

செயற்பாடு 4 : கூத்துக்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவியொன்றின் உற்பத்தி, பயன்பாடு, பின் அதன் நிலை தொடர்பாக தகவல் திரட்டி உமது குழுவினருடன் கலந்துரையாடி சுயசரிதை ஒன்று எழுதுக.

## மொழிவளம்

### பழமொழிகள்

பழமொழிகள் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எளிமையும் பொருளாழமும் நிறைந்தனவாகப் பழமொழிகள் உள்ளன. தமிழில் பழமொழி நானூறு என்ற பெயரில் ஒரு இலக்கியம் உள்ளது. இது பழமொழிக்கு இருக்கும் சிறப்பை உணர்த்துகிறது.

கட்டுரையாக்கம், மேடைப்பேச்சு, நாடகம் முதலியவற்றில் பழமொழிகளை பொருத்தமாகப் பயன்படுத்துவதன் மூலம் கூறவரும் கருத்துக்களைச் சிறப்பாக வெளிப்படுத்தலாம்.

ஒரு பழமொழிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் வழங்கப்படுவதும் உண்டு.

**01. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்**

சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்.
உடலில் உயிர்(காற்று) உள்ளபோதே பாவங்களைப் போக்கிக்கொள்.

**02. சோளியன் குடுமி சும்மா ஆடுமா**

தமது தேவையை நிறைவு செய்து கொள்ள வேண்டும் எனும் உத்தேசத்துடன் உதவுபவர்களும் உள்ளனர்.
சோளியன் குடுமி சும்மாடு ஆகுமா ? என்று வழங்கும் போது கைவசமுள்ள பொருட்களாயினும் பயன்பாட்டிற்கு உதவாது என்ற பொருளைத் தருகிறது

**03 ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்**

பிறரது பிள்ளையை ஆதரித்து வளர்த்தால் தமது பிள்ளைகள் தானே வளரும்.
ஊரார் பிள்ளையாகிய தன் மனைவிக்கு ஊட்டி வளர்த்தால் அவள் வயிற்றில் வளரும் தன் பிள்ளை தானே வளரும்.

**04. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.**

மரணம் எந்த வயதிலும் வரும்.

அறுவருடன் இணைந்தாலும் சாவு நூற்றுவரோடு இணைந்தாலும் சாவு; மகாபாரதத்தில் கர்ணன் கூற்றாக வரும் செய்ந்நன்றி மறவாமை பற்றியது

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
2. ஆடத்தெரியாதவனுக்கு மேடை கோணலாம்.
3. தவளையும் தன் வாயால் கெடும்.
4. ஆனைக்கும் அடி சறுக்கும்.
5. பலதும் கற்கப் பண்டிதனாவான்.
6. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை

# இலக்கணம்

## வினைச் சொற்களின் வகைகள்

வினைச் சொற்களைப் பலவகைகளாக வகைப்படுத்துவர். இந்தவகுப்பில் பின்வரும் இரு வகைகளைப் பற்றி விளங்கிக் கொள்வோம்.

- ★ உடன் பாட்டு வினை
- ★ எதிர் மறை வினை

### உடன்பாட்டு வினை

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ இன்று நான் படித்தேன்.
- ★ மழை பெய்யும்.
- ★ மாமா, வீட்டுக்கு வருவார்.
- ★ நீங்கள் விளையாடப் போனீர்கள்.

இந்த வசனங்களில் வரும் படித்தேன், பெய்யும், வருவார், போனீர்கள் ஆகிய வினைகள் ஒரு செயல் நடைபெற்றதைக் காட்டுகிறது. செயல் நடைபெற்றதை காட்டும் வினைகளை உடன்பாட்டு வினை என்பர்.

### எதிர்மறை வினை:

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ இன்று நான் படிக்கவில்லை.
- ★ மழை பெய்யாது.
- ★ மாமா வீட்டுக்கு வரமாட்டார்.
- ★ நீங்கள் விளையாட போகவில்லை.

இந்த வசனங்களில் வரும் படிக்கவில்லை , பெய்யாது, வரமாட்டார், போகவில்லை ஆகிய வினைகள் ஒரு செயல் நடைபெறாததைக் காட்டுகிறது.
செயல் நடை பெறாததைக் காட்டும் வினைகளை எதிர்மறைவினை என்பர்.

## பயிற்சி

**01. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் வினைகளை விளங்கி அவை உடன்பாட்டு வினையா, எதிர்மறை வினையா என்று எழுதுக.**

1. இந்தப் பேருந்து போகாது.
2. நாங்கள் மரம் நடுவோம்.
3. பறவை பறந்து போனது.
4. மாணவர்கள் பாட மாட்டார்கள்.
5. நண்பன் வருவான்.

**02. பின்வரும் உடன்பாட்டு வினைகளை எதிர்மறை வினைகளாக மாற்றுவோம்.**

1. நான் படம் பார்ப்பேன்.
2. பறவைகள் இனிமையாகப் பாடும்.
3. உஷா அன்பாகப் பேசுவாள்.
4. நாளை வெயில் அடிக்கும்.
5. மாணவர்கள் விளையாடுவார்கள்.

**03. பின்வரும் எதிர்மறை வினைகளை உடன்பாட்டு வினைகளாக மாற்றுவோம்.**

1. நான் பாடசாலைக்கு வரமாட்டேன்.
2. அவன் கவிதைகளை வாசிக்கவில்லை.
3. உனக்குப் பாட முடியாது.
4. வயலில் பயிர் விளையாது.
5. தம்பி விளையாடாதே.